## தூத்துக்குடி மாநகராட்சி பத்திரிகை செய்தி

தூத்துக்குடி மாநகர பகுதிகளில் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறாக அலைந்து வரும் கால்நடைகளால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். எனவே, பொதுமக்கள் தாங்கள் வளர்க்கும் கால்நடைகளை முறையாக தங்கள் கட்டுப்பாட்டில் வளர்க்குமாறு பல்வேறு காலகட்டங்களில் மாநகராட்சி சார்பில் அறிவிப்புகள் வெளியிடப்பட்டது. இருப்பினும், ஒரு சில கால்நடை உரிமையாளர்கள் பொதுமக்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் விதமாக கால்நடைகளை வீதிகளில் அலைய விடுவதால் பொது நலன் கருதி தூத்துக்குடி மாநகராட்சி சார்பில் 18 மாடுகளை பிடித்து அதற்கென அமைக்கப்பட்டுள்ள கொட்டிலில் தங்க வைத்து பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் தொடர்புடைய கால்நடை உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கப் பட்டுள்ளது. எனவே, இனிவரும் காலங்களில் இது போன்ற நிகழ்வுகளை தவிர்த்திடுமாறும் பொது நலன் கருதி உரிமையாளர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் கால்நடைகளுக்கு என கொட்டில்கள் அமைத்து பராமரிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.